நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


# நமது தினகனி

NAMADHU DHINA KANI


தமிழ் நாளிதழ்

RNI-TNTAM/2023/88253






| Vol: 02 | Issue: 23 | 4 Pages | 23.8.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 23 | 4 பக்கங்கள் | 23.8.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை

**விளக்கம்:**
தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை.

## ஹிண்டன்பர்க்: 'மோதானி மோசடி' காங்கிரஸ் நாடு தழுவிய போராட்டம்



அமெரிக்கா, ஆக. 23

அமெரிக்காவைச் சோ்ந்த ஹிண்டன்பா்க் நிறுவனம், அதானி குழுமம் தொடா்பான குற்றச்சாட்டுகளை ஆய்வறிக்கையாகக் கடந்த ஆண்டு ஜனவரியில் வெளியிட்டது. இது இந்திய அரசியலில் முக்கியத்துவம் பெற்றது. எதிர்க்கட்சிகள் அதானி மற்றும் பிரதமர் மோடியின் நட்பபடை விமர்சிக்கத்தொடங்கின.

இந்நிலையில் அதானி குழும முறைகேடு புகாா் தொடா்புடைய நிதி நிறுவனங்களின் முதலீட்டுத் திட்டங்களில் செபியின் தலைவரும், அவரது கணவரும் பங்குகளை வைத்திருப்பதால் அக்குழுமத்துக்கு எதிரான விசாரணையில் செபி ஆர்வம் காட்டவில்லை என ஹிண்டன்பா்க் மீண்டும் குற்றச்சாட்டைக் கூறியுள்ளது. அதோடு அதற்கான ஆதாரங்களையும் அந்த ஆய்வு நிறுவனம் வெளியிட்டது.

செபி தலைவர் மாதபி பூரி புச்சுடன் எங்களுக்கு எந்த வணிக உறவும் இல்லை என்று அதானி நிறுவனமும், ஹிண்டன்பர்க் கூறிய குற்றச்சாட்டு அடிப்படையற்றது என்றும் மாதபி பூரியும் மறுப்பு தெரிவித்து இருந்தனர்.

இந்நிலையில், செபி தலைவரை பதவி நீக்கம் செய்யக்கோரி ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரிலும் உள்ள அமலாக்கத்துறை அலுவலத்தை முற்றுகையிட்டு நாடு தழுவிய போராட்டத்தை இன்று [ஆகஸ்ட் 22] நடத்த உள்ளதாக காங்கிரஸ் கட்சி அறிவித்திருந்தது.

அதானியின் மெகா ஊழல் குறித்த விசாரணை செய்யவேண்டும். இந்த ஊழலில் பிரதமரும் சம்பந்தப்பட்டுள்ளார். பங்குச் சந்தை ஒழுங்குமுறை இப்போது கடுமையாக சமரசம் செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு விஷயங்களை முன்னிறுத்தி தான் நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம் என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர்க் கே.சி வேணுகோபால் தெரிவித்திருந்தார்.

மேலும், செபி தலைவர் மாதபி பூரி புச் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும், அவர் மீதமான குற்றச்சாட்டை விசாரிக்கப் பாராளுமன்ற கூட்டுக் குழுவை அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இன்று இந்த போராட்டத்தைக் காங்கிரஸ் நடத்த உள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் மாநிலங்களவை எம்.பி ஜெயராம் ரமேஷ் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியதாவது, நாடு முழுவதிலும் 20 மாநாடுகளை நடத்தி, மோதானி [மோடி அதானி] மெகா மோசடி மூலம் கோடிக்கணக்கான சிறு முதலீட்டாலர்களை ஏமாற்றியும், பொருளாதாரத்தைப் பாதிக்கும் வகையிலும் நடந்த ஊழலை விசாரிக்க பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிட வலியுறுத்துவோம் என்று பதிவிட்டுள்ளார்.

## கடந்த ஆண்டில் நடந்த எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்2 தேர்வுகளில் 65 லட்சம் மாணவர்கள் தோல்வி



புதுடெல்லி, ஆக. 23

மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நாடு முழுவதும் 56 மாநில கல்வி வாரியங்கள் மற்றும் 3 தேசிய கல்வி வாரியங்கள் உட்பட 59 பள்ளி கல்வி வாரியங்கள் மூலம் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ்2 தேர்வுகள் நடத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு நடத்தப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ்2 தேர்வு முடிவுகளை பகுப்பாய்வு செய்ததில், பிளஸ்2 தேர்வை அரசு பள்ளிகளில் அதிக அளவு மாணவிகள் எழுதியுள்ளனர், ஆனால் தனியார் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் குறைந்த அளவிலான மாணவிகளே தேர்வு எழுதியுள்ளனர்.

10ம் வகுப்பு படித்த சுமார் 33.5 லட்சம் மாணவர்கள், 11ம் வகுப்புக்கு செல்லவில்லை. காரணம் 5.5 லட்சம் பேர் தேர்வு எழுதவில்லை, 28 லட்சம் மாணவர்கள் தேர்ச்சி பெறவில்லை.

இதேபோல், சுமார் 32.4 லட்சம் மாணவர்கள், 12ம் வகுப்பை தாண்டவில்லை. இவர்களில் 5.2 லட்சம் பேர் தேர்வே எழுதவில்லை. 27.2 லட்சம் பேர் தோல்வியடைந்துள்ளனர்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மத்திய கல்வி வாரியத்தில் மாணவர்கள் தோல்வி 6 சதவீதம். மாநில வாரியங்களின் தோல்வி 16 சதவீதம். பிளஸ் 2 தேர்வில், மத்திய வாரியத்தில் தேர்ச்சி பெறாதோர் 12 சதவீதமாகவும், மாநில வாரியங்களின் தேர்ச்சி பெறாதவர்கள் 18 சதவீதமாகவும் உள்ளது. 10 மற்றும் 12ம் வகுப்புகளில் திறந்தநிலைப் பள்ளிகளின் செயல்திறன் மோசமாக உள்ளது.

மத்தியபிரதேச மாநில வாரியத்தில் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ்2 தேர்வில் மாணவர்கள் அதிக அளவில் தோல்வி அடைந்துள்ளனர். பீகார், உத்தரபிரதேச மாநிலங்களில் பிளஸ்2 தேர்வில் மாணவர்கள் அதிக அளவில் தோல்வி அடைந்துள்ளனர். 2022ம் ஆண்டை ஒப்பிடுகையில் 2023ம் ஆண்டில் மாணவர்களின் ஒட்டுமொத்த செயல்திறன் குறைந்துள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் தேர்ச்சிபெறுவதில் மாணவிகளே ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 3 ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலை முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் பேச்சு

சென்னை, ஆக. 23

சென்னை லீலா பேலஸ் ஓட்டலில் இன்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய 19 தொழில் திட்டங்களைத் தொடங்கி வைத்து, ரூ.51,157 கோடி முதலீட்டில் 41,835 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய 28 தொழில் திட்டங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தமிழ்நாட்டின் தொழில் துறை வரலாற்றிலும், வளர்ச்சி வரலாற்றிலும் இது மிக மிக முக்கியமான நாள்!

நம்முடைய பொருளாதாரத் திறனை உலகிற்கு எடுத்துக் காட்டும் நாளாகவும், தமிழ்நாட்டிற்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதை உணர்த்தும் நாளாகவும் இந்த நாள் அமைந்திருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தியிருக்கிறோம். மாநாடுகளை நடத்துவதைவிட, அந்த மாநாடுகள் மூலமாக எவ்வளவு முதலீடுகளை ஈர்த்தோம் என்பதில்தான், வெற்றி அடங்கியிருக்கிறது!

அந்த மாநாடு மூலமாக நாம் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை631. ஈர்க்கப்பட்ட முதலீடுகளின் மதிப்பு 6.64 லட்சம் கோடி ரூபாய்! இதன் மூலமாக 14 லட்சம் பேருக்கு நேரடியாகவும், 12 லட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மொத்தமாக சொல்ல வேண்டும் என்றால், கடந்த மூன்று ஆண்டுகளில், 31 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில், 9 லட்சத்து 74 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம்.

தமிழ்நாட்டில் நிம்மதியாக தொழில் நிறுவனத்தை நடத்தலாம் என்ற நம்பிக்கை தொழிலதிபர்களுக்கு வந்திருக்கிறது. அதன் அடையாளமாகத்தான், ஏராளமான தொழிற்சாலைகள் கடந்த மூன்றாண்டுகளாக தமிழ்நாட்டில் உருவாகி வருகிறது.

உங்களுக்கு என் அன்பான வேண்டுகோள் என்னவென்றால், நீங்கள் தொழில் நிறுவனங்களை தொடங்கினால் மட்டும் போதாது; உங்களைப் போன்று இருக்கின்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் தமிழ்நாட்டிற்கு அழைத்து வாருங்கள்... தொழில் தொடங்க வையுங்கள்...

தமிழ்நாடு அரசின் தொழில்துறை தூதுவர்களாக நீங்கள் எல்லோரும் மாற வேண்டும்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, இந்த மூன்று ஆண்டுகளில், எண்ணற்ற தொழில் திட்டங்களை தமிழ்நாடு ஈர்த்திருக்கிறது. அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர்தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலை



வாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களையும் ஈர்த்து, அதன்மூலமாக, 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற தமிழ்நாட்டின் இலக்கை அடைவதற்காக நம்முடைய அரசு முனைப்போடு செயலாற்றி வருகிறது.

இந்த இருமுனை முயற்சி, இப்போது சாதகமான பலன்களை தந்து வருகிறது. இன்றைய தினம் பல்வேறு வகையான திட்டங்களை தொடங்கி வைத்திருக்கிறேன்.

★ தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பச் சேவைகள்,
★ ஜவுளி மற்றும் ஆடைகள்,
★ கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது.

இதன்மூலம் 1 லட்சத்து 6 ஆயிரத்து 803 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட இருக்கிறது. இதில் சிறப்பம்சம் என்ன வென்றால், இதில் பெருமளவிலான வேலை வாய்ப்புகள் பெண்களுக்கானவை!

பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்ற நம்முடைய அரசின் நடவடிக்கைகளுக்கு இந்த சாதனை மேலும் ஊக்கமளிக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் பரவலான மற்றும் நிலைக்கத்தக்க வளர்ச்சியை உறுதி செய்வதில் நம்முடைய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே வேலைவாய்ப்புகள் பெருமளவில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

130க்கும் மேற்பட்ட 'பார்ச்சூன் 500' நிறுவனங்கள் தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்துள்ளதும், தமிழ்நாட்டின் முதலீட்டு ஈர்ப்புத் திறனுக்கு அத்தாட்சியாக விளங்குகிறது.

நம்முடைய இளைஞர்கள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பல்வேறு துறைகளில், பல்வேறு வகைகளில் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, எங்கள் இளைஞர்களின் திறன்களை நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று முதலீட்டாளர்களை கேட்டுக் கொள்கிறேன்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பி. ராஜா, அரசு செயலாளர் அருண்ராய், மேலாண்மை இயக்குனர் விஷ்ணு, செந்தில் ராஜ், காஞ்சிபுரம் கலெக்டர் கலைச் செல்வி மோகன், செயல் இயக்குனர் சினேகா கலந்து கொண்டனர்.

## சசிகலா-ஓ.பி.எஸ்.சை ஆதரிப்பவர்களை ஓரம்கட்ட எடப்பாடி பழனிசாமி திட்டம்



சென்னை, ஆக. 23

பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தோல்வியடைந்ததையடுத்து அக்கட்சியின் பொதுச் செயலாளரான எடப்பாடி பழனிசாமி மாவட்ட செயலாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர் கட்சியின் செயற்குழு கூட்டத்தையும் நிர்வாகிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்தார். இந்த கூட்டங்களின் போது

அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் மற்றும் முன்னணி நிர்வாகிகள் மீது கீழ் மட்டத்தில் உள்ள நிர்வாகிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறினார்கள். இதையெல்லாம் கவனமாக கேட்டுக் கொண்ட எடப்பாடி பழனிசாமி, கட்சியில் அதிரடியாக சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்துள்ளார்.

அ.தி.மு.க.வில் தற்போது 82 மாவட்ட செயலாளர்கள் உள்ளனர். இவர்களில் சிலர் சசிகலா, ஓ.பன்னீர்செல்வம் இருவரையும் கட்சியில் மீண்டும் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி வருவதாக கூறப்படுகிறது.

இவர்களை அ.தி.மு.க.வில் இருந்து ஓரம் கட்ட எடப்பாடி பழனிசாமி முடிவு செய்துள்ளார். அவர்களுக்கு பதிலாக தனது நெருங்கிய ஆதரவாளர்கள் 20 பேரை புதிய மாவட்ட செயலாளர்களாக நியமிக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

அதே நேரத்தில் சுறுசுறுப்பாக செயல்படாத மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை பதவியில் இருந்து தூக்கவும் எடப்பாடி பழனிசாமி காய் நகர்த்தி வருகிறார்.

சட்டமன்ற தொகுதிகள் வாரியாக மாவட்ட செயலாளர்களை நியமிக்கவும் அ.தி.மு.க. தலைமை முடிவு செய்துள்ளது. இப்படி கட்சியை மறு சீரமைப்பு செய்து விட்டால் சசிகலா, ஓ.பி.எஸ்.சுக்கு ஆதரவான குரல்கள் அடங்கிப் போய் விடும் என்பதே எடப்பாடி பழனிசாமியின் கணக்காக உள்ளது.

வருகிற டிசம்பர் மாதம் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல், 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தல் ஆகியவற்றை எதிர் கொள்ளும் வகையில் இன்னும் சில மாதங்களிலேயே புதிய மாவட்ட செயலாளர்களை நியமித்து விட வேண்டும் என்பதில் எடப்பாடி பழனிசாமி உறுதியாக உள்ளார்.

கட்சி பணிகளில் வேகமாக செயல்பட்டு வரும் கீழ்மட்ட நிர்வாகிகளை மாவட்ட செயலாளர்களாக்கி விட்டால் அவர்கள் மேலும் சிறப்பாக செயல்படுவார்கள் என்கிற எண்ணத்தில் எடப்பாடி பழனிசாமி புதியவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க திட்டமிட்டுள்ளதாக அ.தி.மு.க. மூத்த நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது, 'தமிழகத்தில் பாஜக கட்சிக்குஎதிரானநிலைப்பாட்டை எடுத்தால் மட்டுமே வெற்றிபெற முடியும் என்கிற நிலையே உள்ளது. இதனையே எடப்பாடி பழனிசாமி கடைபிடித்து வருகிறார். இதன் மூலம் பாஜக அல்லாத வலுவான கூட்டணியை அமைத்து வரும் காலங்களில் வெற்றி பெறுவோம்' என்றார்.

## இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை சார்பில் மது (ம) போதை ஒழிப்பு மாநாட்டின் விளக்க உரை மற்றும் தலைவரின் பிறந்த நாள் விழா

திருவள்ளூர், ஆக. 23

இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை சார்பில்தி ருவள்ளூர் மைய மாவட்டம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் பாண்டேஸ்வரம் ஊராட்சியில் மாவட்ட செயலாளர் மாஸ்டர் அருண் கௌதம் தலையில், ஒன்றிய செயலாளர் ஆசீர்வாதம் முன்னிலையில், ரைட் சக்தி ஒருங்கிணைப்பில் மது மற்றும் போதை ஒழிப்பு மாநாட்டின் விளக்க உரை மற்றும் எழுச்சி தமிழர் பிறந்தநாளை முன்னிட்டு 100 க்கும் மேற்பட்டோருக்கு நல



திட்ட உதவிகள், படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் நான்கு மாணவர்களுக்கு ஊக்குத் தொகையாக தலா 5000 ரூபாய் போன்றவற்றை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக மாநில இளைஞரணி துணைச் செயலாளர் லெனின் அன்பரசு கலந்து கொண்டு மது மற்றும் போதை பொருள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் நிகழ்வில் திருமிசை சேகர், வெங்கடேசன், தட்சனா, பா.ஜெஸ்டின், வெ.விஷ்வா மற்றும் பாண்டேஸ்வரம் இளஞ்சிறுத்தைகள் பிரபு, சத்திய பாரதி, சதீஷ், விமல், சிறுத்தை அருன், பரத்ராஜ், ஈஸ்வர், சிம்புமற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தன

நமது தினகனி



# சத்துணவு மையங்களுக்கு அவித்த முட்டைகளை உரிக்கும் எந்திரம் விரைவில் பயன்பாட்டுக்கு வருகிறது

சென்னை, ஆக. 23

தமிழகத்தில் 1962ம் ஆண்டு பள்ளிகளில் மதிய உணவு திட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டமானது 1982ம் ஆண்டு சத்துணவு திட்டம் மேம்படுத்தப்பட்டது.

அனைத்து பள்ளி செல்லும் குழந்தைகளும் முறையாக பள்ளி செல்வதை ஊக்குவிக்கும் வகையிலும், அனைவருக்கும் ஆரம்பக்கல்வி வழங்குவதை உறுதி செய்யவும், இந்த திட்டத்தின் கீழ், தமிழகத்தில் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு வகையான ஊட்டச்சத்து மிகுந்த சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.



இந்த திட்டத்தின் கீழ் 1 முதல் 5ம் வகுப்பு வரையிலான 20 லட்சத்து 74 ஆயிரத்து 39 மாணவர்களும், நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளை சேர்ந்த 21 லட்சத்து 97 ஆயிரத்து 914 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். தற்போது, சத்துணவு திட்டத்தின் கீழ் பயனடையும் மாணவர்களுக்கு, 43 ஆயிரத்து 131 சத்துணவு மையங்கள் மூலம் 5 வகையான கலவை சாதங்களுடன் மசாலா முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. இது, மாணவர்களுக்கு பிடித்த உணவாகவும் மாறி உள்ளது.

இருப்பினும், சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர், சமையல் உதவியாளர்களுக்கு, சத்துணவு தயாரிப்பின்போது, முட்டையை உரிக்க பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறார்கள். குறிப்பாக, அதிகளவு பயனாளிகளை கொண்ட சத்துணவு மையங்களை சேர்ந்த பணியாளர்கள் முட்டை உரித்தலில் சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில், சத்துணவு சமையலர்கள் மற்றும் உதவியாளர்களின் சிரமத்தைகருத்தில்கொண்டு, அதிகளவு பயனாளிகளை கொண்ட சத்துணவு மையங்களுக்கு முட்டை உரிப்பதற்கான நவீன எந்திரம் கொள்முதல் செய்ய சமூக நலன் துறை திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து, சமூக நலத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் 451 பள்ளி சத்துணவு மையங்களில் 500 பயனாளிகளுக்கு மேல் உள்ளனர். இந்த மையங்களை சேர்ந்த பணியாளர்கள் தினமும் 500 முட்டைகளுக்கு மேல் வேக வைத்து அவற்றை உரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், அவர்கள் சிரமங்களை சந்திக்கிறார்கள். சில நேரங்களில், மாணவர்களுக்கானமுட்டைகள் உடைந்து வீணாகி விடுகின்றன.

மேலும், சுகாதாரத்தையும் உறுதி செய்ய வேண்டிய சூழல் உள்ளது. இதன்காரணமாக, அதிக அளவு பயனாளிகளை கொண்ட 431 பள்ளி சத்துணவு மையங்களுக்கு நவீன முட்டை உரிக்கும் எந்திரம் வாங்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இதற்காக நிதி ஒதுக்கீடு செய்து எந்திரம் கொள்முதல் செய்வதற்கான அனுமதி கோரி தமிழக அரசிடம் சமூக நலத்துறை சார்பில் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில், இதற்கான அனுமதி கிடைத்துவிடும். அதன்பிறகு, டெண்டர் விடப்பட்டு, முட்டை உரிக்கும் எந்திரம் சத்துணவு மையங்களில் பயன்பாட்டுக்கு வந்துவிடும். இந்த எந்திரம் பயன்பாட்டு வந்தால், சத்துணவு பணியாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மோதிர மலைகுற்றியார் தற்காலிக பாலத்தை காட்டாற்று வெள்ளம் இழுத்துச் சென்றது

நாகர்கோவில், ஆக. 23

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. இந்த நிலையில் மேலும் 2 நாட்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. நேற்று மலையோர பகுதியான பாலமோர் பகுதியில் கன மழை கொட்டி தீர்த்தது.



மழை இடைவிடாமல் பெய்து கொண்டே இருந்தது. இரவும் கனமழை கொட்டியதால் அங்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பாலமோரில் அதிகபட்சமாக 70.4 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

நாகர்கோவில், தக்கலை, குளச்சல், கோழிப்போர்விளை, குழித்துறை, ஆணைக்கிடங்கு, முள்ளங்கினாவிளை பகுதிகளிலும் விட்டுவிட்டு மழை பெய்து கொண்டே இருந்தது. மலையோர பகுதிகளில் கொட்டிய மழையின் காரணமாகபேச்சிப்பாறை அணைக்கு வரக்கூடிய நீர் வரத்து கணிசமாக உயர்ந்துள்ளது. இதையடுத்து அணையில் இருந்து வெளியேற்றப்பட்ட உபரி நீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் வெளியேற்றப்படுவதால் கோதையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

கோதையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக மோதிரமலை குற்றியாறு தரைப்பாலத்தை மூழ்கடித்து தண்ணீர் சென்றது. ஏற்கனவே அந்த பகுதியில் பழைய பாலத்தை மாற்றிவிட்டு புதிய பாலம் கட்டுமான பணி நடைபெற்று வருவதால் அங்கு தற்காலிக பாலம் அமைக்கப்பட்டு இருந்தது. அந்த தற்காலிக பாலத்தை காட்டாற்று வெள்ளம் இழுத்துச் சென்றது. தற்காலிக பாலத்தை காட்டாற்று வெள்ளம் இழுத்துச் சென்றதால் குற்றியாருக்கு சென்ற பஸ் திரும்பி வெளியே வரமுடியாத நிலை ஏற்பட்டது. கிழவி ஆறு, தச்சைமலை உள்பட 12 மலையோர கிராமங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதால் பள்ளி மாணவமாணவிகள், தொழிலாளர்கள் கடும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

தற்காலிக பாலத்தை சீரமைத்தால் மட்டுமே கிராம மக்கள் வெளியே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் குற்றியாறில் நிறுத்தப்பட்டுள்ள பஸ் பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. திற்பரப்பு அருவி பகுதியில் விட்டு விட்டு பெய்து வரும் மழையால் ரம்யமான சூழல் நிலவுகிறது.

அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டி வருவதால் இன்று 4வது நாளாக அருவியில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் விட்டுவிட்டு சாரல் மழை பெய்து வருவதால் இதமான குளிர் காற்று வீசுகிறது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் இன்று காலை 44.42 அடியாக இருந்தது. அணைக்கு 1346 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 579 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. உபரி நீராக 753 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 69.05 அடியாக உள்ளது. அணைக்கு 605 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 510 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சிற்றார்1நீர்மட்டம் 13.87 அடியாக உள்ளது. அணைக்கு 180 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 150 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

மாவட்ட முழுவதும் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு: பேச்சிப்பாறை 48.2, பெருஞ்சாணி 15.4, கன்னிமார் 7.2, கொட்டாரம் 3.4, மயிலாடி 2.4, நாகர்கோவில் 8.2, ஆரல்வாய்மொழி 8.2, பூதப்பாண்டி 15.2, முக்கடல் 17.6, பாலமோர் 70.4, தக்கலை 13.2, குளச்சல் 2, இரணியல் 8.4, அடையாமடை 12, குருந்தன்கோடு 10.4, கோழிப்போர்விளை 8.2, மாம்பழத்துறையாறு 24, களியல் 10.2, குழித்துறை 2.4, புத்தன்அணை 12.6, சுருளோடு 25.2, அடையாமடை 26.6, திற்பரப்பு 21.3, முள்ளங்கினாவிளை 7.4.

# மழைநீர் தேங்கிய பள்ளத்தில் குழந்தைகளுடன் தவறி விழுந்த பெண்கள்



மதுரை, ஆக. 23

தமிழகத்தில் கடந்த சில வாரங்களாக மிதமான முதல் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக தென்மாவட்டங்களில் மதுரை, சிவகங்கை, விருதுநகரில் மாலை நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

ஏற்கனவே சாலைகள் மோசமாக உள்ள நிலையில் திடீர் மலை காரணமாக போக்குவரத்திற்கு லாயக்கற்ற நிலையில் சாலைகள் மாறி உள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளில் செல்வோர் மழைநீர் தேங்கியிருக்கும் பள்ளங்களில் விழுந்து காயமடைவது நிகழ்ந்து வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் நேற்று பிற்பகல் முதல் மிதமாகன மலை பெய்தது. சாத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பெய்த மழையால் சாலைகளில் தண்ணீர் குளம் போல் தேங்கியது. நேற்று சாத்தூரில் உள்ள ஒரு கடைக்கு 2 கைக்குழந்தைகளுடன் பெண்கள் குடை பிடித்த படி வந்தனர்.

கடை அருகே நெடுஞ்சாலைத்துறையால் தோண்டப்பட்டிருந்த பள்ளத்தில் மழைநீர் முழுவதுமாக தேங்கியிருந்தது. இதை அறியாமல் கைக்குழந்தைகளுடன் வந்த 2 பெண்களும் எதிர்பாராத விதமாக பள்ளத்தில் விழுந்து தண்ணீரில் மூழ்கினர்.

இதை பார்த்து அதிர்ச்சியடைந்த கடைக்காரர்கள் விரைந்து செயல்பட்டு 2 கைக்குழந்தைகள், பெண்களை மீட்டனர். அதிர்ஷ்டவசமாக காயம் ஏற்படவில்லை.

பெண்கள் 2 குழந்தையுடன் பள்ளத்தில் விழும் காட்சி அங்குள்ள சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகி இருந்தது. அந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

இதற்கு பலரும் நெடுஞ்சாலைத்துறைக்கும், உள்ளூர்அரசுநிர்வாகத்திற்கும் கண்டனம் தெரிவித்தும் வருகின்றனர்.

# 19 உதவி கமிஷனர்கள் அதிரடி மாற்றம்: டி.ஜி.பி. உத்தரவு

சென்னை, ஆக. 23

சென்னை மாநகரில் 19 உதவி கமிஷனர்கள் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை டி.ஜி.பி. சங்கர் ஜிவால் பிறப்பித்துள்ளார்.



எழும்பூர் உதவி கமிஷனர் மனோஜ்குமார், வடபழனியில் பணியாற்றிய அருள்சந்தோஷமுத்து ஆகியோர் உளவு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

செம்பியம் உதவி கமிஷனர் பிரவீன்குமார் பாதுகாப்பு பிரிவுக்கும், தரமணி உதவி கமிஷனராக சையது பாபுவும் நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய குற்றப்பிரிவு உதவி கமிஷனர் அனந்தராமன் வடபழனி உதவி கமிஷனராகியுள்ளார். கமிஷனர் அலுவலக செய்தி மக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றிய விஜயராமுலு, கிண்டி உதவி கமிஷனராகவும், அண்ணாநகர் கிருஷ்ணமூர்த்தி செய்தி மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை போன்று சென்னையில் மேலும் பல அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# பாம்பன் புதிய ரெயில் பாலத்தில் ரெயிலை இயக்கி சோதனை ஓட்டம்



ராமேஸ்வரம், ஆக. 23

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தையும், ராமேசுவரம் தீவையும் இணைக்கும் வகையில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட ரெயில்பாலம் அடிக்கடி பழுதடைந்து வந்தது. இதையடுத்து புதிய பாலம் கட்ட மத்திய அரசு முடிவெடுத்தது.

அதன்படி ரூ.545கோடி மதிப்பில் மண்டபம்பாம்பனை இணைக்கும் வகையில் பிரமாண்டமாகன புதிய ரெயில் பாலம் கட்டப்பட்டுள்ளது.

இதன் பணிகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன. அடுத்த மாதம் திறக்கப்படும் என ரெயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரெயில் பாலத்தில் உறுதி தன்மை குறித்து சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

பாம்பன் ரெயில் பாலத்தில் இன்று என்ஜின் மற்றும் 11 சரக்கு பெட்டிகளுடன் கூடிய ரெயிலை இயக்கி சோதனை ஓட்டம் நடந்தது. 20 கி.மீட்டர் முதல் 40 கி.மீட்டர் வேகத்தில் ரெயில் இயக்கப்பட்டது.

அப்போது பாலத்தின் நடுவே உள்ள தூக்குபாலத்தின் உறுதி தன்மை, அதிர்வுகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்தனர். புதிய பாலத்தில் ரெயில் இயக்கியது அப்பகுதி மக்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# கை அசைவு சிகிச்சைக்கு புதிய ரோபோடிக் கருவி கண்டுபிடிப்பு

வேலூர், ஆக. 22

பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்கள் அதிக செலவு மற்றும் நேரம் ஆகியவற்றை செலவிட வேண்டி உள்ளது. மேலும் பல்வேறு முறை ஆஸ்பத்திரி சென்று கை அசைவு செய்து சிகிச்சை பெற வேண்டி உள்ளது.




இதனை தவிர்க்கும் வகையில் வேலூர் சி.எம்.சி. சென்னை ஐஐடி இணைந்து கை அசைவு சிகிச்சைக்கான புதுமையான, மலிவு விலையிலான கையடக்க ரோபோடிக் கருவியை உருவாக்கியுள்ளன.

பிளக் அண்ட் டிரெய்ன் ரோபோஅல்லதுப்ளூடோ எனும் கை நரம்பு மறுவாழ்வுக்கான இந்த கருவி ஒரு மிக்சர் கிரைண்டரின் வடிவமைப்பை மாதிரியாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்கு வேலூர் சிஎம்சியில் உள்ள பயோ இன்ஜினியரிங் துறையைச்சேர்ந்த பேராசிரியர்கள் சிவகுமார், பாலசுப்ரமணியன், ஐ.ஐ.டி. சென்னை மெக்கானிக்கல் என்ஜினியரிங் துறையைச் சேர்ந்த பேராசிரியர் சுஜாதா சீனிவாசன் ஆகியோர் தலைமை வகித்துள்ளனர்.

மேலும், இந்த கருவியானது வேலூர்சி.எம்.சி.யில் உள்ள உடல் மருத்துவம், மறுவாழ்வு, நரம்பியல் அறிவியல் துறைகளுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 மாதங்களில் இது 1000 நோயாளிகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 100 டாக்டர்கள் இதனைபயன்படுத்தி உள்ளனர். சிறிய மருத்துவமனைகள் மற்றும் கிளினிக் மற்றும் வீடுகளில் இருந்தே இதனை பயன்படுத்துவதற்கு ஏற்றபடி உருவாக்கப்பட்டுள்ளது.


இந்த கண்டுபிடிப்புக்கு இந்திய காப்புரிமை பெற்றுள்ள நிலையில், அமெரிக்கா, கனடா நாடுகளின் காப்புரிமைக்கு நிலுவையில் உள்ளது.

இந்த அரிய கண்டுபிடிப்பு இந்தியா மட்டுமின்றி உலகளவில் நரம்பியல் மறுவாழ்வு பராமரிப்பை கணிசமாக மேம்படுத்தும் என தெரிவித்தனர்.

# கொடநாடு வழக்கில் தொடர்புடைய கார் டிரைவர் கனகராஜின் சகோதரர் தனபாலுக்கு நெஞ்சுவலி

சேலம், ஆக. 23

சேலம் மாவட்டம் எடப்பாடியை சேர்ந்தவர் கார் டிரைவர் கனகராஜ். இவர் தலைமையிலான கும்பலைச் சேர்ந்தவர்கள் கொடநாட்டில் உள்ள ஜெயலலிதாவின் பங்களாவில் கொள்ளை அடிக்க சென்றனர். அப்போது காவலாளியை கொன்று விட்டு கொள்ளையடித்து சென்றனர்.




இது தொடர்பாக விசாரணை நடத்திய போலீசார் கேரளாவை சேர்ந்த 10 பேரை கைது செய்த நிலையில் கனகராஜ் ஆத்தூர் அருகே மர்மமான முறையில் இறந்தார்.

இந்த கொள்ளை வழக்கில் கனகராஜின் சகோதரர் தனபாலையும் போலீசார் கைது செய்தனர். இவர் கனகராஜின் சிம் கார்டை எரித்து சாட்சியங்களை அழித்ததாக அவர் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டது.

இந்தநிலையில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு தாரமங்கலம் சப்இன்ஸ்பெக்டர் அழகு துரையின் சட்டையை பிடித்து தள்ளியதாக போலீசார் தனபாலை கைது செய்தனர். பின்னர் கோர்ட்டில் ஆஜர் படுத்திய போலீசார் அவரை சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்தநிலையில் நேற்று தனபாலுக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. அவரை உடனடியாக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே சிறையில் இருந்த போதும் அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. இது குறித்து அஸ்தம்பட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# கருணாநிதி நினைவு நாணயம் ரூ.50 லட்சத்திற்கு விற்பனை

சென்னை, ஆக. 23

மறைந்த முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தை மத்திய மந்திரி ராஜ்நாத் சிங் கடந்த 18ந்தேதி சென்னையில் வெளியிட்டார்.




இந்தநாணயம் தி.மு.க. தலைமை நிலையமான சென்னை அண்ணா அறிவாலயத்தில் கிடைக்கிறது. தோழமை கட்சித் தலைவர்களுக்கு இலவசமாக 1 நாணயம் வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அமைச்சர்கள், எம்.பி.க் கள், எம்.எல்.ஏ.க்கள், மாவட்டச் செயலாளர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள் அண்ணா அறிவாலயத்திற்கு சென்று ஆர்வமுடன் நாணயங்களை வாங்கிச் சென்றனர். மொத்தம் 1000 நாணயங்கள் இருந்ததில் நேற்று மட்டும் 500 நாணயங்கள் ரூ.50 லட்சத்துக்கு விற்கப்பட்டுள்ளன. 100 ரூபாய் நாணயம் 10 ஆயிரத்துக்கு விற்கப்படுவதால் எம்.எல்.ஏ.க்களே 5 நாணயம் என்ற அளவில் தான் வாங்கிச் செல்கின்றனர். தி.மு.க.வில் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், வி.ஐ.பி.க்கள் அதிகம் பேர் உள்ளதால் ஒவ்வொருவரும் என்ன விலையாக இருந்தாலும் நாணயத்தை வாங்கிச் செல்வதில் ஆர்வமாக இருந்தனர்.

வி.ஐ.பி.க்கள் வந்து வாங்கிச் செல்வதால் கைவசம் உள்ள நாணயம் இன்றுடன் தீர்ந்து விடும் என தலைமை கழக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதனால் தி.மு.க. தொண்டர்கள் 100 ரூபாய் நாணயம் கிடைக்காதா? என்று ஏக்கத்துடன் உள்ளனர். 100 ரூபாய் கொடுத்து நாணயம் வாங்க வழிவகை செய்ய வேண்டும் என்று தொண்டர்கள் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர்.

# மழை வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் விடிய விடிய தூங்காமல் தவித்த பொதுமக்கள்



திருப்பூர், ஆக. 23

திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக மாலை நேரத்தில் மழை பெய்து வருகிறது. குறிப்பாக நேற்று முன்தினம் மற்றும் நேற்று மாலை மழை கொட்டித் தீர்த்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் குளம் போல் தண்ணீர் தேங்கியது. அவினாசி பகுதிகளில் பெய்த மழையால் மின் சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் சிரமமடைந்தனர்.

திருப்பூர் பலவஞ்சிப்பாளையத்தில் குறவர் சமூக மக்கள் குடியிருந்து வருகின்றனர். இங்கு 30க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. மழையால் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது. இதனால் வீட்டில் இருந்த பொருட்கள் தண்ணீரில் மிதந்தன. மேலும் வீடுகளை சுற்றிலும் தண்ணீர் தேங்கியதால் கடும் சிரமம் அடைந்தனர்.

அப்பகுதி பெண்கள் கூறும்போது,

40 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு வசித்து வருகிறோம். குடியிருப்புக்கு அருகே சமீபத்தில் தடுப்பு சுவர் கட்டியதால் மழைநீர் செல்ல வழியில்லாமல் வீடுகளுக்குள் புகுந்து விட்டது. இதனால் விடிய விடிய தூங்காமல் தவித்தோம். மழைநீர் வடிந்து செல்ல அதிகாரிகள் உரிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர்.

திருப்பூர் குளத்துப்பாளையம் பகுதியில் மழை பெய்தபோது, மின்னல் தாக்கியதில் ஆதி திராவிடர் காலனியில் உள்ள ஒரு வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. இதில் வீட்டுக்குள் இருந்த 70 வயது முதியவர் மீது சுவர் விழுந்து அமுக்கியது. வடக்கு தீயணைப்பு நிலைய வீரர்கள் விரைந்து சென்று காயமடைந்த முதியவரை மீட்டு 108 ஆம்புலன்சு உதவியோடு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருப்பூர் ராயபுரத்தில் மரம் சரிந்து சாலையில் விழுந்தது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உடனடியாக வடக்கு தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று மரத்தை வெட்டி அகற்றி போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்தினார்கள். இது போல் குமார் நகர் அவினாசி ரோட்டில் விழுந்த மரத்தையும் வடக்கு தீயணைப்பு வீரர்கள் வெட்டி அகற்றினர்.

உடுமலையை அடுத்த மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கட்டப்பட்டுள்ள அமராவதி அணை மூலமாக திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்தில் 54 ஆயிரத்து 637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. தொடர் மழையால் கடந்த ஒரு மாதமாக அணை அதன் முழு கொள்ளளவில் நீடித்து வருகிறது.

உபரி நீர் பிரதான கால்வாய், அமராவதி ஆறு சட்டர்கள் மற்றும் மதகுகள் வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. இன்று காலை 6 மணி நிலவரப்படி 90 அடி உயரம் கொண்ட அணையில் 88.09 அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1,122 கனஅடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 1044 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

உடுமலை திருமூர்த்தி அணை மூலமாக பிஏபி., பாசன திட்டத்தின் கீழ் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் 3 லட்சத்து 76 ஆயிரத்து 152 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. பிஏபி., தொகுப்பு அணைகளில் இருந்து காண்டூர் கால்வாய் மூலமாக தண்ணீர் கொண்டு வரப்பட்டு கடந்த 18ந் தேதி முதல் 2 ம் மண்டல பாசனத்திற்கு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அணையின் நீர் பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் பாலாற்றின் மூலமாக அணைக்கு வினாடிக்கு ஆயிரம் கனஅடிக்கும் மேலாக நீர்வரத்து உள்ளது. இதனால் 60 அடி உயரம் கொண்ட அணையில் 57.02 அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 200 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 1122 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் பாலாற்றில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியின் நீர் பிடிப்பு பகுதியில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அடிவாரத்தில் அமணலிங்கேஸ்வரர் கோவிலை வெள்ளம் சூழ்ந்தது. இதனால் கோவில் உண்டியலில் இருந்த ரூபாய் நோட்டுகள் மழைநீரில் நனைந்தன. நனைந்த ரூபாய் நோட்டுகள் காய வைத்து எடுக்கப்பட்டது.

திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்து வரும் மழையால் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது.

மேலும்நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இன்று காலை லேசான தூரலுடன் சாரல் மழை பெய்தது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

# சென்னை ராஜீவ்காந்தி ஆஸ்பத்திரியில் 77 ஆண்டுகளாக துணி துவைக்கும் நீராவி எந்திரம்




சென்னை, ஆக. 23

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் பயன்படுத்தும் துணிகளை சலவை செய்ய தனியாக பணியாளர்கள் உள்ளனர். இந்த மருத்துவமனையில் தினமும் 3 ஆயிரம் முதல் 3,200 துணிகள் சலவை செய்யப்படுகின்றன.

இந்ததுணிகளைசலவை செய்வதற்காக 10 நீராவி எந்திரங்கள் உள்ளன. இவற்றில் 6 நீராவி எந்திரங்கள் ஆங்கிலேயர் காலத்து நீராவி சலவை எந்திரங்கள் ஆகும். மீதமுள்ளவை நவீன கால எந்திரங்கள் ஆகும்.

ஆங்கிலேயர் காலத்து சலவை எந்திரங்கள் பெல்ட் மூலம் இயக்கப்படுகின்றன. இதில் ஒரு எந்திரம் ஏற்கனவே இயக்கப்பட்டு வருகிறது.

மேலும் மற்ற எந்திரங்களையும் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக எந்திரங்கள் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து கடந்த வாரம் வரை மேலும் ஒரு எந்திரம் இயங்கியது.

தற்போது அதன் கியர் பழுதடைந்துள்ளது. பழுது பார்க்கும் பணிக்காக அந்த எந்திரம் காத்திருக்கிறது. மேலும் மற்ற எந்திரங்களையும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகசலவை பணியாளர்கள் கூறியதாவது: இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஆங்கிலேயர் காலத்து எந்திரத்திலேயே சலவை செய்ய மிகவும் பிடித்துள்ளது. இந்த எந்திரங்கள் 1947ம் ஆண்டுக்கு முன்பே தயாரிக்கப்பட்டது.

சுமார் 77 ஆண்டுகளாக ஆங்கிலேயர் காலத்து நீராவி எந்திரங்கள் சென்னை ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் துணிகளை துவைக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த எந்திரம் பயன்படுத்துவதற்கும் மிகவும் எளிதாக இருக்கிறது. மேலும் அதிக துணிகளையும் சலவை செய்யும்.

இந்த எந்திரம் பித்தளை மற்றும் துருப்பிடிக்காத எக்கு மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே மிகவும் உறுதியாக உள்ளது. அதே நேரத்தில் நவீன தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது.

ஒவ்வொரு எந்திரமும் 100 கிலோ எடை கொள்ளளவு கொண்டது. ஒரு சுற்றுக்கு 75 முதல் 90 துணிகளை சலவை செய்கிறோம். இதற்கு 40 முதல் 45 நிமிடங்கள் ஆகும்.

மருத்துவமனையில் பயன்படுத்தும்துணிகளில் 60 சதவீத துணிகள் இந்த எந்திரங்களிலேயே சலவை செய்யப்படுகின்றன. இந்த எந்திரங்களை பராமரிக்க தனியாக என்ஜினீயர் ஒருவரும் இருக்கிறார். ஆங்கிலேயர்காலத்து எந்திரங்களை இயங்க வைக்க நாங்கள் முடிந்த வரை முயற்சி மேற்கொண்டு வருகிறோம்.

லண்டனில் இருந்து இயக்கப்பட்ட 3 எந்திரங்களில் 2 எந்திரங்கள் தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளன. நீராவியில் சலவை செய்யும் பணிகள் தினமும் 8 மணிக்கு தொடங்குகிறது. ஆங்கிலேயர் காலத்து எந்திரங்களில் துணிகளை துவைக்க நாங்கள் பழகி விட்டோம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# நடுரோட்டில் கால்மேல் கால்போட்டு படுத்து செல்போன் பார்த்த வாலிபர்




காரைக்குடி, ஆக. 23

மனிதனுக்கு இரண்டு கண்கள் என்றால், சமூக வலைதளத்துக்கு பார்ப்பதெல்லாம் கண்கள்தான். பொது வெளியில் நடக்கும் சம்பவம் அடுத்த விநாடி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி அதில் ஈடுபட்ட நபரைகதி கலங்கவைத்து விடுகிறது. இதனால் சிக்கிக்கொண்டோரும், பிரபலமானவர்களும் பலர்.

அதிலும் குறிப்பாக மது போதையில் சிலர் செய்யும் வேடிக்கைகள் ஒருபுறம் ரசிக்க வைத்தாலும், அதற்கு லைக் கொடுத்து, கருத்து சொல்பவர்களின் வார்த்தைகள் சவுக்கடிக்கு சமமாகவும் இருந்துள்ளது. வேடிக்கை, வினோதங்களின் மூலம் தங்களை ஈர்ப்பதற்காகவும் ஒருசிலர் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

அந்த வகையில் செட்டிநாடு புகழ் காரைக்குடியிலும் ஒரு சம்பவம் அரங்கேறி சமூக வலைதளங்களை ஆக்கிரமித்துள்ளது. அதுபற்றிய விபரம் வருமாறு:

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பர்மா காலனி பகுதியான காரைக்குடி அறந்தாங்கி செல்லும் சாலை நேற்று மாலை வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக்கொண்டு இருந்தது. அப்போது அனைவரையும் திரும்பி பார்க்க வைக்கும் வகையில் அந்தி சாயும் மாலை வேளையில் சுமார் 45 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் மது போதையில் அந்த பகுதிக்கு வந்தார்.

அரைக்கால் டவுசர், பனியன் அணிந்திருந்த அவர் வெயில் குறைந்த மழை வாசம் அடித்த குளுகுளு சாலையின் நடுவில் வீட்டின் படுக்கை அறையில் படுப்பது போன்று கால் மேல் கால் போட்டு படுத்துக் கொண்டார். மேலும் தனது டவுசர் பையில் வைத்திருந்த செல்போனை எடுத்து அதனை பார்த்துக் கொண்டே அந்த சாலையை கடந்து சென்ற பெண்களை பார்த்து கேலி, கிண்டலும் செய்தார்.

தலைக்கேறிய போதை, தடுமாற்றத்துடன் கூடிய நடை, போதைக்கு ஊறுகாயாக கேலி, கிண்டல் வேறு என்று அந்த வாலிபரின் எல்லை அத்துமீறி போனது. பலர் வேடிக்கை பார்க்க, சிலர் செல்போன்களில் வீடியோ எடுக்க, இதெல்லாம் நமக்கு எதற்கு என்று கண்டுகொள்ளாமல் சென்றனர் மற்றும் பலர். அறிவுரை கூறி அப்புறப்படுத்த நினைத்து அருகில் சென்றவர்கள் அச்சத்துடன் திரும்பி வந்தனர்.

ஏதாவது அசம்பாவித சம்பவத்தில் அவர் இறங்கினால் என்று எண்ணி, நமக்கேன் வம்பு வந்த வழியாக திரும்பினர். இருந்த போதிலும் பொதுமக்களுக்கு இடையூறாகவும், அவர்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் நடந்து கொண்ட வாலிபரை அங்கிருந்து அனுப்பி வைக்க அதே பகுதியைச் சேர்ந்த சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் சொக்கலிங்கம் முயற்சி மேற்கொண்டார்.

உடனடியாக இதுபற்றி அவர் போலீசாருக்கு தகவல் கொடுத்தும் யாரும் வர வில்லை. இதற்கிடையே சாலையில் நடுவில் படுத்திருந்த அந்த வாலிபர் எழுந்து ரோட்டில் அங்குமிங்கும் சென்றார். பின்னர் ஒரு மரத்தடியில் சென்று அமர்ந்து கொண்டார். அக்கம்பக்கத்தினர் மூலம் அவரது நண்பர்களை வரவழைத்து ஒரு வழியாக போதை வாலிபரை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இந்த ரகளையால் காரைக்குடி பர்மா காலனி சாலை சற்று நேரம் பரபரப்பாக காணப்பட்டது.

# நம்பியாற்றில் வெள்ளம்: திருமலைநம்பி கோவிலுக்கு செல்ல தடை



களக்காடு, ஆக. 23

நெல்லை மாவட்டம் திருக்குறுங்குடி மேற்கு தொடர்ச்சி மலையில் அடர்ந்த வனப்பகுதியில் திருமலை நம்பி கோவில் உள்ளது. பழமை வாய்ந்த இந்த கோவில் 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றாக திகழ்கிறது.

மேலும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட சிறப்பு வாய்ந்தது ஆகும். இந்நிலையில் திருக்குறுங்குடி மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்து வரும் மழையின் காரணமாக வனப்பகுதியில் ஓடும் நம்பியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து திருக்குறுங்குடி திருமலை நம்பி கோவிலுக்கு செல்ல பக்தர்களுக்கு இன்று தடை விதிக்கப்பட்டுள்ளதாக திருக்குறுங்குடி வனத்துறையினர் அறிவித்துள்ளனர்.

இதுபோல நம்பியாற்றில் குளிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் குறைந்தது



சேலம், ஆக. 23

காவிரிநீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக அங்குள்ள கிருஷ்ணராஜ சாகர், கபினி அணைகள் நிரம்பியது. இதனால் உபரிநீர் தமிழகத்துக்கு காவிரியில் திறக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாக நீர்வரத்து அதிகரித்து கடந்த மாதம் 30ந் தேதி மேட்டூர் அணை நிரம்பியது.

தொடர்ந்து அணைக்கு வினாடிக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் கனஅடிக்கு மேல் தண்ணீர் வந்ததால் அது அப்படியே உபரிநீராக 16 கண் பாலம் வழியாக காவிரி ஆற்றில் திறக்கப்பட்டது. இதன் காரணமாக காவிரி கரையோர மாவட்டங்கள் வெள்ளக்காடானது. இதற்கிடையே நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் நீர்வரத்தும் குறைந்தது. இதன் காரணமாக உபரிநீர் திறப்பு நிறுத்தப்பட்டது. தொடர்ந்து நீர்வரத்தை விட அதிகளவில் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்ததால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்தது.

பின்னர் மீண்டும் கடந்த வாரம் நீர்வரத்து அதிகரித்தது. அதிகபட்சமாக வினாடிக்கு 45 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தால் அணை இந்தாண்டில் 2வது முறையாக நிரம்பியது.

இதையடுத்து மீண்டும் உபரிநீர் 16 கண் பாலம் வழியாக வெளியேற்றப்பட்டது. தொடர்ந்து வழக்கம்போல்நீர்வரத்து குறைந்ததால் உபரிநீரும் நிறுத்தப்பட்டது. அணைக்கு வரும் நீரின் அளவை பொறுத்து அணையில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்து விட்டதால் அணைக்கு நீர்வரத்து இன்று காலை வினாடிக்கு 8 ஆயிரத்து 563 கனஅடியாக குறைந்தது. ஆனால் தொடர்ந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருவதாலும் அணையின் நீர்மட்டம் 119.76 அடியாக குறைந்தது. அணைக்கு வரும் தண்ணீரை விட அதிக அளவில் வெளியேற்றப்பட்டு வருவதால் நீர்மட்டம் குறைய தொடங்கியது.

# அரசு வேலை வாங்கி தருவதாக தனியார் பள்ளி ஆசிரியையிடம் ரூ.12 லட்சம் மோசடி

சேலம், ஆக. 23

சேலம் அம்மாப்பேட்டை மெயின்ரோடு பகுதியை சேர்ந்தவர் சந்திரபால், இவரது மனைவி சவுதாமணி (43), முதுநிலை பட்டதாரி ஆசிரியையான இவர் சேலத்தில் உள்ள தனியார் பள்ளியில் பணி புரிந்து வருகிறார்.

இவரிடம் சென்னையை சேர்ந்த அருண்குமார் என்பவர் தொடர்பு கொண்டார். தொடர்ந்து சவுதாமணியின் வீட்டிற்கு வந்த அருண்குமார் அரசு பள்ளியில் அவருக்கு ஆசிரியை பணி வாங்கி தருவதாகவும், அவரது கணவரிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவியாளர் பணி வாங்கி தருவதாகவும் கூறி உள்ளார். இதனை நம்பிய சவுதாமணி, அருண்குமாருக்கு கூகுள் பே மூலம் கடந்த 2021 மற்றும் 22ம் ஆண்டுகளில் ரூ. 12 லட்சத்து 25 ஆயிரத்து 250 ரூபாயை 15 தவணைகளாக அனுப்பி உள்ளார். ஆனால் அவர் கூறிய படி இதுவரை வேலை வாங்கி கொடுக்கவில்லை. பல முறை கேட்டும் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. இதனால் தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த சவுதாமணி சேலம் மாநகர போலீஸ் கமிஷனரிடம் புகார் கொடுத்தார். அவரது உத்தரவின் பேரில் விசாரணை நடத்திய அம்மாப்பேட்டை போலீசார் அருண்குமார் மீது மோசடி உள்பட பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து அவரை தேடி வருகிறார்கள்.

# கோவில் திருவிழாவில் பழங்குடியின பெண் அன்னதானம் வழங்க எதிர்ப்பு



பாப்பிரெட்டிப்பட்டி, ஆக. 23

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள பிரசித்தி பெற்ற இருளப்பட்டி காளியம்மன் கோவில் உள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் தங்களது நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக இந்த கோவிலுக்கு வந்து செல்கின்றனர்.

இந்த கோவில் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது. ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் தேர் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

இந்த கோவிலில் வழக்கம் போல இந்த ஆண்டும் தேர் திருவிழா இன்று காலை தொடங்கியது. இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வருகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியை சார்ந்த சுகனவிலாசம் (வயது 30). அவரது மனைவி அனிதா (27). வங்கி ஊழியரான அனிதாவுக்கு திருமணமாகி 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் குழந்தை பாக்கியம் இல்லாததால் இருளப்பட்டி காளியம்மன் கோவிலில் குழந்தை வரம் கேட்டு வேண்டியுள்ளார்.

இந்த நிலையில் அனிதாவுக்கும் குழந்தை பிறந்ததால், அதற்குப் பரிகாரமாக நேர்த்திக்கடனை செலுத்துவதற்காக இருளப்பட்டி தேர் திருவிழாவில் 2500 பக்தர்களுக்கு உணவு சமைத்து அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

அப்போது அங்கு வந்த சிலர் அனிதாவை அன்னதானம் வழங்க விடாமல் தடுத்து கோவிலை விட்டு வெளியேற்றினர். இதனால் தம்பதியினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதனால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அனிதா கூறியதாவது:

நான் இந்த இருளப்பட்டி பகுதியை சேர்ந்தவள். எனக்குதிருமணமாகி கணவருடன் ஊத்தங்கரையில் வசித்து வருகிறேன். திருமணமாகி சில காலங்கள் எங்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால் இந்த கோவிலில் வேண்டிகொண்டோம். பிறகு எங்களுக்கு குழந்தை பிறந்தது.

அதற்கு பரிகாரமாக இந்த கோவிலில் தேர்த்திருவிழாவின்போது அன்னதானம் வழங்குவதற்காக வந்தோம். அப்போது மாற்று சமூகத்தை சார்ந்த ஒரு சிலர் பழங்குடியின பெண்ணான நீங்கள் அன்னதானம் வழங்க கூடாது எனக் கூறி எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த நாங்கள் வேண்டுதல் நிறைவேற்ற ஒத்துழையுங்கள் என கெஞ்சி கேட்டோம். இருந்தபோதிலும் அவர்கள் எங்களை விரட்டினர்.

இந்த நிலையில் அங்கு வந்த போலீசாரிடமும் நாங்கள் அன்னதானம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். ஆனால் போலீசார் எங்களை இங்கிருந்து வெளியேற்றுவதிலேயே குறியாக செயல்பட்டனர்.

நாங்கள் எவ்வளவு எடுத்துக் கூறியும் போலீசார் எங்களை கோவில் பகுதியில் இருந்து வெளியேற்றி விட்டனர். மேலும் அருகிலுள்ள திருமண மண்டபத்தில் அரசின் அனுமதி பெற்று அன்னதானம் இடுவதற்கும் அனுமதிக்காமல் எங்களது சமையல் செய்யும் சிலிண்டர் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு வெளியேறும் படி கட்டாயப்படுத்தி மிரட்டினர். இந்த நிலையில் ஒரு வழியாக மாலை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டோம் என்று தெரிவித்தார்.

சம்பவம் குறித்து பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியரிடம் கேட்டபோது, அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோவிலில் அனைத்து சமூக மக்களும் வழிபாடு செய்வதற்கும் அன்னதானம் வழங்குவதற்கும் முழு உரிமை உண்டு. அதை யாராலும் தடுக்க முயற்சிகள் மேற்கொண்டால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இச்சம்பவம் குறித்து அறிந்த உடனேயே சம்பவ இடத்திற்கு சென்ற வருவாய் துறையினர் அந்த பெண்ணை அன்னதானம் வழங்குவதற்கு எந்த தடையும் ஏற்படுத்தக் கூடாது என வலியுறுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் அன்னதானம் வழங்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது என்றார்.

மேலும் இந்த சம்பவம் குறித்து அரூர் டி.எஸ்.பி. ஜெகநாதன் நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த சம்பவம் குறித்து அவர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாப்பிரெட்டிப் பட்டியில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் காளியம்மன் கோவிலில் பழங்குடியின பெண் அன்னதானம் வழங்குவதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்த சம்பவம் அந்த பகுதி பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

## மகாராஜா படத்தை தவறவிட பாக்யராஜ் தான் காரணமா? நடிகர் சாந்தனு விளக்கம்



குரங்கு பொம்மை இயக்குநர் நித்திலன் சுவாமிநாதன் இயக்கத்தில் விஜய் சேதுபதியை நடிப்பில் வெளியான மகாராஜா திரைப்படம் இந்திய அளவில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

விஜய் சேதுபதியின் 50 வது திரைப்படமான மகாராஜா கடந்த ஜூன் 14 ஆம் தேதி வெளியாகி 100 கோடி வசூலைத் தாண்டியது.

படத்தின் வெற்றியைத் தொடர்ந்து கடந்த ஜூலை 12 ஆம் தேதி ஓடிடி தளமான நெட்பிளிக்ஸில் மகாராஜா வெளியிடப்பட்டது. இதன்மூலம் இந்தியா மட்டுமல்லாது உலக அளவில் மகாராஜா கவனம் ஈர்த்தது.

நெட்பிளிக்ஸ் கமன்ட் செக்ஷனில் வெளிநாட்டவர்கள் மகாராஜாவை புகழ்ந்து பதிவிட்டு வருகின்றனர். இந்நிலையில் 2024 இல் நெட்பிளிக்ஸில் அதிகம் பார்க்கப்பட்ட இந்திய படம் என்ற பெருமையை மகாராஜா பெற்றுள்ளது. உலகம் முழுவதிலும் நெட்பிளிக்ஸில் சுமார் 18.6 மில்லியன் பேர் மகாராஜா படத்தைப் பார்த்துள்ளனர்.

மேலும் ரிலீசாகி 6 வாரங்களில் ஆகியும் உலகம் முழுவதிலும் சுமார் 8 நாடுகளில் டாப் 10 வரிசையில் மகாராஜா டிரெண்டிங்கில் உள்ளது.

இந்நிலையில், மகாராஜா படத்தில் நடிக்க முதலில் சாந்தனுவை அணுகியதாக அப்பட இயக்குநர் நித்திலன் தெரிவித்திருந்தது பரபரப்பாக பேசப்பட்டது.

இதனையடுத்து, மகாராஜா படத்தை சாந்தனு தவறவிட பாக்யராஜ் தான் காரணம் என்ற தகவல் சமூக வலைத்தளங்களில் தீயாய் பரவியது.

இந்நிலையில் இது குறித்து நடிகர் சாந்தனு தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், "மகாராஜா போல் ஒரு சிறந்த படத்தை கொடுத்ததிற்கு இயக்குநர் நித்திலன் சாமிநாதனுக்கு நன்றி. என்னை முதலில் இந்த கதைக்கு தேர்வு செய்ததில் மிகவும் மகிழ்ச்சி. மேலும், இந்த படத்தை நான் மிஸ் செய்ததிற்கு என் அப்பாவோ இல்லை நானோ காரணம் இல்லை. அப்பாவிற்கு இயக்குநர் என்னிடம் வந்து கதை சொன்னது தெரியாது. அந்த சமயத்தில் தயாரிப்பு நிறுவனம் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை அதனால் தான் இப்படத்தில் நடிக்க முடியாமல் போனது" என்று தெரிவித்துள்ளார்.

## வாழை' சிம்பிளான படம்தான்.. ஆனா உள்ள அவ்ளோ வலி இருக்கு.. பாராட்டிய சிம்பு வீடியோ



மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் வாழை. மாரி செல்வராஜ் தனது சிறுவயது வாழ்க்கையை மையப்படுத்தி இப்படத்தை உருவாக்கியுள்ளார். இந்த படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். இந்த படம் வருகிற 23ந் தேதி திரைக்கு வர இருக்கிறது.

இதையொட்டி படத்தின் Pre Release விழா சென்னையில் நேற்று மாலை நடந்தது. விழாவில் தயாரிப்பாளர் தாணு, இயக்குநர்கள் ரஞ்சித், வெற்றிமாறன், சசி, மிஷ்கின், அருண் மாதேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். மேலும் படத்தை பார்த்த பிரபலங்கள் பலரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் லோகேஷ் கனகராஜ் உள்ளிட்டோர் படம் குறித்து தங்களின் பார்வையை வெளிப்படுத்தினர்.

அந்த வகையில், நடிகர் சிலம்பரசன் வாழை படத்தைப் பார்த்துவிட்டு மாரி செல்வராஜை நேரில் அழைத்துப் பேசியுள்ளார். மேலும் படம் குறித்த தனது பார்வையை வீடியோவிலும் பேசி பதிவு செய்துள்ளார். வாழை படம் கண்டிப்பாக மக்களுக்கு பிடிக்கும். படம் சிம்பிளான ஒரு படம் தான் ஆனால் படத்திற்குள் அவ்வளவு வலி இருக்கிறது என்றும் சிம்பு தெரிவித்தார்.

## 'கொட்டுக்காளி' என்றால் என்ன அர்த்தம்? படம் குறித்த அனுபவங்களை பகிரும் சூரி வீடியோ



கடந்த 2022 ஆம் ஆண்டு இந்தியா சார்பில் ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட கூழாங்கல் படத்தை இயக்கிய அறிமுக இயக்குநர் பிஎஸ் வினோத்ராஜ் தனது அடுத்த படைப்பாக கொட்டுக்காளி திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

சிவகார்த்திகேயன் தயாரிப்பில் சூரி நடிப்பில் உருவாகி இருக்கும் இந்த படம் பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு மக்களின் ஆதரவைப் பெற்றுப் பல விருதுகளையும் வென்றுள்ளது. இந்த படம் இந்த வாரம்வெளிவெள்ளிக்கிழமைஆகஸ்ட் 23 ஆம் தேதி அன்று வெளியாக உள்ளது. சூரி, அன்னா பென் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி உள்ள 'கொட்டுக்காளி' திரைப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி மக்களின் கவனத்தை பெற்றது. இந்த படம் நாளை மறுநாள் ஆகஸ்ட் 23 ஆம் தேதி வெள்ளிக்கிழமை வெளியாக உள்ளது. படத்தில் இசையமைப்பாளர் இல்லாதது படத்தின் எதிர்பார்ப்பை இன்னும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இயக்குனர் பிஎஸ் வினோத்ராஜ், நடிகர் சூரி மற்றும் பிற நடிகர்கள் சூட்டிங் ஸ்பாட் அனுபவம் மற்றும் படத்தின் கதை குறித்து பேசும் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

கொட்டுக்காளி என்பது தென் தமிழக பகுதிகளில் சாதாரணமாக புழக்கத்தில் உள்ள ஒரு வார்த்தைதான். ஒரு பெண் தனக்கு விருப்பமானதை செய்யும்போதும், அது ஊராருக்கு தவறாக தெரிந்தால் அந்த பெண்ணை அவர்கள் கொட்டுக்காளி என்று அழைப்பார்கள் என்று இயக்குனர் பிஎஸ் வினோத்ராஜ் அந்த வீடியோவில் தெரிவித்துள்ளார். மேலும் இதுபோல சூரியும், நடிகை அன்னா பென் உள்ளிட்டோரும் படம் குறித்த தங்களது பார்வையை அந்த வீடியோவில் பகிர்ந்துள்ளனர்.

## நடிகர் சிங்கமுத்துவிடம் ரூ.5 கோடி நஷ்ட ஈடு கேட்டு நடிகர் வடிவேலு வழக்கு

சென்னை ஐகோர்ட்டில், பிரபல நகைச்சுவை நடிகர் வடிவேலு தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

1991ம் ஆண்டு முதல் சினிமாவில் சிறு சிறு வேடங்களில் நடித்தேன். என்னுடைய கடும் உழைப்பால் முன்னேறி, 300 படங்களுக்கு மேல் நடித்து, பிரபல நகைச்சுவை நடிகரானேன். இன்றளவும் என்னுடைய நகைச்சுவை காட்சிகள் சமூக வலைதளங்களில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எதிர்மனுதாரர் நடிகர் சிங்கமுத்துவும், நானும் கடந்த 2000ம் ஆண்டு முதல் ஒன்றாக பல படங்களில் நடித்தோம். நாங்கள் சேர்ந்து நடித்த படங்கள் மிகப்பெரிய வெற்றியையும், புகழையும் தந்தது.

ஒரு காலக்கட்டத்தில், எனக்கு கிடைக்கும் வரவேற்பு சிங்கமுத்துவுக்கு கிடைக்காததால், அவருக்கு பொறாமை உண்டானது. அதனால், என் மீது பகை கொண்டார். 2015ம் ஆண்டுக்கு பின்னர், என்னைப் பற்றி மோசமாக பேசத் தொடங்கினார். அதனால், அவர் இல்லாமல் நடிக்கத் தொடங்கினேன்.

இதற்கிடையில் தாம்பரத்தில் பிரச்சினைக்குரிய ஒரு நிலத்தை வேண்டுமென்றே சிங்கமுத்து எனக்கு வாங்கிக் கொடுத்தார். இதுகுறித்து சிங்கமுத்துவுக்கு எதிராக எழும்பூர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து, அது நிலுவையில் உள்ளது.



இந்தநிலையில், கடந்த ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை பல்வேறு யூடியூப் சேனல்களுக்கு சிங்கமுத்து அளித்த பேட்டியில், என்னை மிகவும் தரக்குறைவாக பேசியுள்ளார். அதுமட்டுமல்ல ஒரு துளி உண்மைக்கூட இல்லாத பல பொய்களையும் கூறியுள்ளார். இது எனக்கு மிகவும் மனவேதனையை ஏற்படுத்தியது. பொதுமக்கள் மத்தியில் எனக்கு உள்ள நற்பெயருக்கு களங்கத்தை சிங்கமுத்து ஏற்படுத்தியுள்ளார்.

அதனால், 5 கோடி ரூபாயை மான நஷ்ட ஈடாக வழங்க சிங்கமுத்துவுக்கு உத்தரவிட வேண்டும். என்னைப் பற்றி அவதூறாக பேச சிங்கமுத்துவுக்கு தடை விதிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி ஆர்எம்டி. டீக்காராமன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் சார்பில் வக்கீல்கள் கே.ஜி.ரகுநாதன், என்.செந்தில்குமார் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

இதையடுத்து, இந்த மனுவுக்கு சிங்கமுத்து 2 வாரத்துக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார்.

## பெண் டாக்டர் கொலைக்கு நீதி கோரி குடும்பத்துடன் போராட்டத்தில் கலந்துகொண்ட கங்குலி



மேற்கு வங்காள மாநிலம் கொல்கத்தாவில் ஆர்.ஜி.கார் அரசு மருத்துவமனையில் இரவு பணியில் இருந்த முதுநிலை பெண் பயிற்சி டாக்டர் கடந்த 9ந்தேதி ஆடிட்டோரியத்தில் பிணமாக மீட்கப்பட்டார்.

அவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொடூரமாக கொலை செய்யப்பட்டிருப்பது பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

இந்த கொலை தொடர்பாக போலீசில் தன்னார்வ தொண்டராக பணியாற்றிய சஞ்சய் ராய் (33) என்பவர் கைது செய்யப்பட்டு உள்ளார். பெண் டாக்டரின் மரணத்துக்கு நீதி கேட்டு மேற்கு வங்காள மாநிலம்முழுவதும்டாக்டர்கள்பணிகளைபுறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், மருத்துவர் கொலையை கண்டித்து நேற்று இரவு நடைபெற்ற போராட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சவுரவ் கங்குலி தனது மனைவி மற்றும் மகளுடன் கலந்து கொண்டார். போராட்டத்தில் பெண் மருத்துவரின் கொலைக்கு நீதி கோரி கங்குலி மெழுகுவர்த்தி ஏற்றினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய கங்குலியின் மனைவி டோனா, "பாலியல் வன்கொடுமைக்கு எதிராக நாங்கள் போராட்டம் நடத்துகிறோம். இது மேற்கு வங்கம் மட்டுமல்ல. எங்கிருந்தோ யாரோ ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதாக ஒவ்வொரு நாளும் செய்தி வருகிறது, அது நல்ல செய்தி அல்ல. ஒவ்வொரு தனிநபருக்கும் பாதுகாப்பான சமூகம் தேவை" என்று தெரிவித்தார்.

பின்னர் பேசிய கங்குலியின் மகள் சனா, "போராட்டங்கள் தொடர வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

## 1 மணிநேரத்தில் 1 மில்லியன் சப்ஸ்க்ரைபர்களை கடந்தது ரொனால்டோவின் யூட்யூப் சேனல்




உலகின் முன்னணி கால்பந்து வீரராக போர்ச்சுக்கல் நாட்டின் கிறிஸ்டியானோ ரொனால்டோ திகழ்ந்து வருகிறார். 39 வயதான ரொனால்டோ கால்பந்து வாழ்க்கையில் தனது கடைசி கட்டத்தை எட்டியுள்ளார்.

கால்பந்து வீரர் ரொனால்டோ தற்போது யூட்யூபராக புது அவதாரம் எடுத்துள்ளார்.

'யுஆர்கிறிஸ்டியானோ' என்ற புதிய யூடியூப் சேனலை அவர் தொடங்கியுள்ளார். இது தொடர்பான அறிவிப்பு வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில், "நான் யுஆர் கிறிஸ்டியானோ என்ற பெயரில் யூட்யூப் சேனல் ஆரம்பித்துள்ளேன். அதை அனைவரும் சப்ஸ்க்ரைப் செய்து கொள்ளுங்கள்" என்று காமெடியாக பேசியுள்ளார்.

ரொனால்டோவின் யூட்யூப் சேனலை 1 மணிநேரத்திற்குள் 1 மில்லியன் பேர் சப்ஸ்க்ரைப் செய்துள்ளனர். இதுவரை இந்த சேனலில் 18 வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## ஜப்பான் ஓபன் பேட்மிண்டன்: முதல் சுற்றில் இந்திய வீரர் ஜார்ஜ் தோல்வி



ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் தொடர் யோகோஹமாவில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர். இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், ஜப்பான் வீரர் கண்டா சுனேயமா உடன் மோதினார். இதில் ஜார்ஜ் 1921, 1421 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார். நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவிலும் இந்திய வீராங்கனைகள் தோல்வி அடைந்தனர்.

## ஒலிம்பிக்கில் வெண்கலம்: ஹாக்கி வீரர் பி.ஆர்.ஸ்ரீஜேஷ்க்கு ரூ.2 கோடி பரிசு கேரள அரசு



33வது ஒலிம்பிக் தொடரில் நடைபெற்ற ஆண்களுக்கான ஹாக்கி போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் ஸ்பெயின் அணியை எதிர்கொண்டது. இதில், ஹாக்கி இந்தியா அணியின் கேப்டனான ஹர்மன்ப்ரீத் சிங் அடுத்தடுத்து 2 கோல் அடிக்கவே இந்தியா 21 என்று முன்னிலை பெற்று வெண்கலப் பதக்கம் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்தது. இந்திய ஹாக்கி அணி வெண்கலப் பதக்கம் வென்றதைத் தொடர்ந்து அணியின் கோல் கீப்பர் ஓய்வு பெறுவதாக பி.ஆர்ஸ்ரீஜேஷ் அறிவித்தார். இந்நிலையில், பாரீஸ் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற இந்திய ஹாக்கி அணியின் கோல் கீப்பர் பிஆர் ஸ்ரீஜேஷ்க்கு 2 கோடி ரூபாய் பரிசுத் தொகையாக கேரள அரசு அறிவித்துள்ளது. முதலமைச்சர் பினராயி விஜயன் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பிஆர் ஸ்ரீஜேஷ்க்கு 2 கோடி ரூபாய் வழங்கும் முடிவு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக முதலமைச்சர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வுக்கு பின்னர் இந்திய ஹாக்கி அணியில் இளம் வீரர்களை இணைக்கும் இலக்கை நோக்கி இளைஞர்களுக்கு ஸ்ரீஜேஷ் ஹாக்கி பயிற்சி அளித்து வருகிறார். இந்நிலையில், இந்திய ஹாக்கியில் அவர் அளித்த பங்களிப்பை பாராட்டும் வகையில் கேரள அரசு 2 கோடி ரூபாய் பரிசுத் தொகை அறிவித்துள்ளது.

## பும்ராவுடன் இணைந்து பணியாற்ற மோர்னே மோர்கல் ஆர்வம் சகோதரர் அல்பி மோர்கல்



இந்திய கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக தென்ஆப்பிரிக்க முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மோர்னே மோர்கல் நியமிக்கப்பட்டார்.

இது குறித்து அவரது சகோதரரும், முன்னாள் வீரருமான அல்பி மோர்கல் கூறுகையில், 'இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருப்பது மிகப்பெரிய பொறுப்பு. மற்ற அணிகளின் பயிற்சியாளர் பதவியை விட கடினமானது. ஏனெனில் அந்த நாட்டில் கிரிக்கெட் மீதான ஆர்வம், கடந்த காலத்தில் அந்த அணி செய்துள்ள சாதனைகளை பார்க்கும் போது எந்தவித தவறுக்கும் இடம் கொடுக்க கூடாது.

மோர்னே மோர்கல் சில சிறந்த வீரர்களுடன் பணிபுரிய இருக்கிறார். இந்திய வீரர்களின் நம்பிக்கையை பெறுவது, அவர்களின் முழு திறமையை வெளி கொண்டு வர உதவுவது மோர்னே மோர்கலுக்கு முக்கியமானதாக இருக்கும்.

மோர்னே மோர்கலுக்கு மிகவும் பிடித்த இந்திய வேகப்பந்து வீச்சாளர் யார் என்பது எனக்கு தெரியாது. அது ஜாகீர் கான், ஜஸ்பிரித் பும்ராவாக இருக்கலாம். பும்ரா, அனைத்து வடிவிலான போட்டியிலும் உலகின் தலைச்சிறந்த பவுலராக திகழ்கிறார். தனிச்சிறப்பு வாய்ந்த வீரர். அவருடன் இணைந்து பணியாற்றுவதை மோர்னே மோர்கல் நிச்சயம் விரும்புவார்' என்றார்.

## ஐசிசி தலைவராகிறார் ஜெய்ஷா



சர்வதேசகிரிக்கெட்கவுன்சிலின்(ஐ.சி.சி.)தலைவராகநியூசிலாந்தை சேர்ந்த கிரேக் பார்கிளே இருக்கிறார். 2020ம் ஆண்டு நவம்பர் 24ந்தேதி அவர் அந்த பொறுப்பை ஏற்றார். வருகிற நவம்பர் 30ந்தேதியுடன் அவரது 4 ஆண்டு காலம் பதவி முடிகிறது. 3 முறை அந்த பதவியில் இருந்த அவர் மேலும் அதில் நீடிக்க விரும்பவில்லை. ஐ.சி.சி. சேர்மன் பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பி.சி.சி.ஐ.) பொதுச் செயலாளரும், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவின் மகனுமான ஜெய்ஷா அந்த பதவிக்கு போட்டியிடுகிறார். அவர் ஐ.சி.சி.யின் சேர்மனாக ஒரு மாதத்தில் தேர்வு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐ.சி.சி. சேர்மன் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் வருகிற 27ந் தேதியாகும். ஜெய்ஷா மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கிறார் என்று தெரிகிறது. டிசம்பர் மாதம் 1ந்தேதி ஐ.சி.சி. புதிய சேர்மனாக ஜெய்ஷா பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இந்தியாவை சேர்ந்த ஜக்மோகன் டால் மியா, சரத் பவார், என்.சீனிவாசன், ஷசாங்க் மனோகர் போன்றவர்கள் ஐ.சி.சி. தலைமை பதவி வகித்தனர். அவர்கள் வழியில் ஜெய்ஷா இணைகிறார். இளம் வயதில் ஐ.சி.சி. சேர்மன் என்ற வரலாற்றை அவர் பதிவு செய்கிறார். அவருக்கு 34 வயதாகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.